<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>

<u>அசல் வழக்கு எண். 727/2021</u>

**2022–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் நாள் திங்கட்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. விஜயா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குமரேசன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : ராமலிங்கம் | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : ஒதியம் | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 55/2022 |

**வாதி தரப்பு முதல் விசாரணை**

1) நான் தாவா வழக்கில் வாதி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். தாவா சொத்து ஆதியில் அரசுக்கு சொந்தமான தரிசு நிலம் என்பதற்குரிய பழைய செட்டில்மெண்ட் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது பெயரில் ஏற்பட்ட தாவா சொத்திற்குரிய கணிணி பட்டா **(வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 05/08/2019, 10/08/2020 மற்றும் 07/10/2022 ஆம் தேதிக்குரிய சாகுபடி அடங்கல் ரசீதுகள் **(வா.சா.ஆ.2 முதல் வ.சா.ஆ.4 வரை ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தாவா சொத்தில் சாகுபடி செய்திருந்த முத்து சோளத்தினை நான் விற்பனை செய்தது குறித்து எடுக்கபட்ட புகைப்படம் மற்றும் அதற்குரிய குறுந்தகடு **(வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தாவா சொத்தில் உள்ள பயிருக்கு 11/10/2022 ஆம் தேதி தகுந்த இன்சூரன்ஸ் செலுத்தியுள்ளேன். அதற்குரிய இணையவழி ரசீது **(வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இ–சேவை மையத்தின் மூலம் பெறப்பட்ட தாவா சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ் **(வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தாவா சொத்திற்குரிய மோசடி கிரய ஆவணத்தின் இணையவழி சான்றிட்ட நகல் **(வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தாவா சொத்தை பொறுத்து எனது பெயரில் இருந்த பட்டாவை எனக்கு தெரியாமல், எனக்கு எந்தவித அறிவிப்பும் கொடுக்காமல் 2,3,4 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாற்றியதற்கான உத்தரவு **(வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

என்னுடைய ஆவணத்தையும், வாக்குமூலத்தையும் ஏற்றுக் கொண்டு, தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

*Sd/-*

District Munsif-cum-Judicial Magistrate,
Kunnam.

DM cum JM Kunnam

DMCunum Kunnam

<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>
<u>அசல் வழக்கு எண். 727/2021</u>

**2022–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் நாள் திங்கட்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. விஜயா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணிவேல் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : நல்லு | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : ஒதியம் | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 62/2022 |

**வாதி தரப்பு முதல் விசாரணை**

1) நான் வாதி தரப்பு 2 வது சாட்சியாவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். தாவா சொத்திற்கு அருகில் எனது நிலம் இருப்பதற்கு ஆதரவாக எனது மற்றும் எனது சகோதரர்களின் பெயரில் உள்ள கணிணி பட்டா **(வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

*Sd/–*

District Munsif–cum–Judicial Magistrate,
Kunnam.